குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்
முன்னிலை : திருமதி.S.ஷர்மிளா, B.A., B.A.,B.L.(Hons.), L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்
சி.சி.எண்.95/2019

அ.சா.1

2024–ம் ஆண்டு அக்டோபர் 17–ம்தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | காவ்யா | ஜாதி |
| கணவர் பெயர் | ரமேஷ் | தொழில் |
| கிராமம் | | சமயம் |
| தாலுக்கா | | வயது |

விசாரணை தொடங்கிய நேரம் : மதியம் 12.39 மணி.

Accused A1.Kaliyamurthi, A2.Ramasami Present. Advocate Mr.A.Nagendiran Present for all accused. APP Mr.P.Suresh Present.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனது வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். நான் சம்பவம் நடந்தவுடன் புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. எனது கணவர் வேலைமுடித்து இரவு வந்ததால் மறுநாள் காலை புகார் கொடுத்தேன். என்னிடம் கைப்பேசி உள்ளது. நான், சம்பவத்திற்கு பின்பு, காவல் அவசர உதவி எண் – 100 க்கு அழைக்கவில்லை என்றால் சரி. நான் புகாரிலோ, போலிசார் விசாரணையிலும் எதிரியின் நிறம், வயது, அடையாளம் ஆகியவற்றை குறிப்பிடவில்லை என்றால் சரி.

2. எதிரிகள் எந்த திசையில் நகை பறித்த பின்பு சென்றார்கள் என்று, புகாரிலும், போலிசார் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான், புகாரிலும், போலிடிசார் விசாரணையிலும் என்னிடமிருந்து பறிக்கப்பட்ட நகையின் வடிவம், அடையாளம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரி. நான் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் களவாடப்பட்ட எனது நகை எப்போது, எந்த கடையில் வாங்கியது என்று சொல்லவில்லை என்றால், சரி. மேற்படி, நகை ரசீதை காவல் நிலையத்தில்

ஒப்படைக்கவில்லை என்றால் சரி. போலிசார் என்னிடம் மேற்படி ரசீதை பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரி.

3. எனது வீட்டிற்கு எதிரே கே.எஸ்.எம் ஜுவல்லர்ஸ் என்பவரது வீடு உள்ளது என்றாலும், எனது வீட்டிற்கு அருகில் வேல்முருகன் ஆட்டோபைனான்ஸ் உள்ளது என்றால் சரி. மேற்படி, இடங்களில் சி.சி.டி.வி கேமரா உள்ளது என்றால் கே.எஸ்.எம் ஜுவல்லர்ஸ் வீட்டில் தான் சி.சி.டி.வி கேமரா உள்ளது. வேல்முருகன் ஆட்டோபைனான்சில் சி.சி.டி.வி கேமரா இல்லை. மேற்படி, சி.சி.டி.வி கேமரா குறித்து, போலிசார் என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் விசாரித்தபோது, சி.சி.டி.வி கேமரா உள்ளதை நான் குறிப்பிட்டேன். போலிசார் அதனை ஆய்வு செய்தார்கள்.

4. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. போலிசார் சொல்லிதான் எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக எனக்கு தெரியும் என்றால் சரி.

**2–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது.

**மறுவிசாரணை : இல்லை.**

விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.53 மணி.

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.